முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்

ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1455

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.09.2023**, சனிக்கிழமை

1. கருணைவடிவான தவசியே
கலித்துன்பம் போக்க வந்த ஞானியே
பெருமைமிக்க தொண்டர்படை கூட்டி
பேருலகையே மாற்றவந்த மாதவசியே
2. தவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தக்கபடி ஞான அறிவுரை ஆசி
அவனியில் சோபகிருது நங்கைத் திங்களில் உரைப்பேன்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 06 ம் நாள், 23.09.2023, சனிக்கிழமை)
அரங்கன்பலம் உலகம் அறியப்பட வேண்டும்
3. வேண்டி அரங்கன் திருவடிப்பற்றி
விரைந்து உலகோர் தொண்டர்களாக மாறி
மாறியே உலகமெல்லாம் ஞானப்படை
மகான் பேரில் அளவில்லா தர்மம் ஆற்ற
4. ஆறுதலாய் உலகமெங்கும் ஆதரவுப்பெருகி அரங்கன் வெளிப்படும் வண்ணம்
அரங்கன் வழி ஆறுமுகனும் இணைந்து வெளிப்படும் வண்ணம்
வரமாக அற்புதம் உலகில் நடக்கும்
வல்லமைபட உலகமெங்கும் தொண்டர்களின் ஆதிக்கம்
5. ஆதிக்கம் ஞானமோடு தர்மவடிவமாக
அளவில்லாப் பெருகி அரங்கன் தீட்சையாலே
தீட்சையாலே உலகோர்க்கு சர்வ சித்தி
தெளிவுதிடம் ஞானமாக இணைந்து பெருகி
6. பெருகியே அற்புதம் நிகழக்கூடும்
பேராசான் அரங்கன் வழிகாட்ட இந்த
பெருமைமிக்க தர்மலோக ஞானலோகமும் கூடிய ஆட்சி
பிசகின்றி உலகம் கண்டடையும்

7. ஆகவே அரங்கனைத் தொடர
அகிலத்தில் மாற்றம் சடுதி
வரமென ஆறுமுகன் யான்
விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–